# தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்

செய்தி வெளியீட்டு எண்:33/2020 நாள்: 09.10.2020

செய்திக்குறிப்பு

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் 09.09.2019 நாளிட்ட அறிவிக்கை எண்.25/2019 வாயிலாக அறிவிக்கை செய்யப்பட்ட உரிமையியல் நீதிபதி பதவிக்கான முதன்மை எழுத்துத் தேர்வு 17.10.2020 முற்பகல் மற்றும் பிற்பகல் & 18.10.2020 முற்பகல் மற்றும் பிற்பகல் சென்னையில் நடைபெற உள்ளது. தகுதியுள்ள விண்ணப்பத்தாரர்களுக்கு முதன்மை எழுத்துத் தேர்வுக்கான தேர்வுக்கூட நுழைவுச்சீட்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இணையதளமான www.tnpscexams.net/www.tnpscexams.in-ல் வெளியிடப்பட்டுள்ளது. முதன்மை எழுத்துத் தேர்வுக்கு தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் விண்ணப்ப எண். (Application No.) அல்லது பயனாளர் குறியீடு (Login id) மற்றும் பிறந்த தேதி ஆகியவற்றை உள்ளீடு செய்து தேர்வுக்கூட நுழைவுச்சீட்டினை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதெனில் அதற்கான காரணத்தை தெரிந்து கொள்ளலாம்.

நுழைவுச்சீட்டினை பதிவிறக்கம் செய்து கொள்வதில் ஏதேனும் சந்தேகம் இருப்பின் 1800 425 1002 என்ற கட்டணமில்லா தொலைபேசியிலோ அல்லது contacttnpsc@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியிலோ தொடர்பு கொண்டு தெளிவு பெறலாம்.

இரா.சுதன், இ.ஆ.ப.,
தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலர்.